**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பல்லடம்.**

**முன்னிலை: திரு.எஸ்.வடிவேல், பி.எஸ்.சி., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் நீதிபதி அவிநாசி,பல்லடம்(பொறுப்பு) .**

**2023–ம் வருடம் ஜூலை மாதம் 13–ம் நாள், வியாழன்கிழமை**

**இடைநிலை மனு எண்.291/2022**
**இன்**
**அசல் வழக்கு எண்.112/2022**

1.ஜெயஸ்ரீ பழனியப்பன்
2.கே.பி.ராஜாஜெயகுமார்
(1ம் வாதியின் பொது அதிகாரம் பெற்ற நபர்)

..மனுதாரர்கள்/வாதிகள்

**.. எதிர் ..**

1.மாவட்ட ஆட்சியர், திருப்பூர்

2.வட்டாட்சியர், பல்லடம்

3.ரேணு பிரகாஷ்

...எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

இம்மனு இறுதியாக 27.04.2023ம் தேதியன்று இந்நீதிமன்றத்தின் முன் இறுதி விசாரணைக்கு வந்தபோது, மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.ஆர்.பி.சுரேஷ்குமார் அவர்கள் ஆஜராகியும், 1, 2ம் எதிர்மனுதாரர்கள் தரப்பில் கற்றறிந்த அரசு தரப்பு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், 3ம் எதிர்மனுதாரர் தரப்பில் கற்றறிந்த வழக்கறிஞர் திரு.வி.ரவீந்தரன் அவர்கள் ஆஜராகியும், இதுநாள் வரை இந்நீதிமன்ற விசாரணையில் இருந்து வந்த இவ்வழக்கில் இன்று இந்நீதிமன்றம் பிறப்பிக்கும்,

**<u>உத்தரவு</u>**

அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்களோ, அவர்களது ஆட்களோ, வேலையாட்களோ, முகவர்களோ, கீழ்நிலை உள்ளவர்களோ, எதிர்மனுதாரர்கள் மூலம் உரிமை கோரும் எந்த ஒரு நபர்களோ எந்த வகையிலும் பழனியப்பனின் வருவாய் ஆவணங்களை திருத்தம் செய்திடவோ அல்லது மாற்றம் செய்திடவோ கூடாது என ஒரு இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் வேண்டி. உரிமையியல் நடைமுறை சட்டம் கட்டளை 39 விதி 1, 2–ன்படி இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம் :–</u>**

2.1.) 1ம் மனுதாரர் 2ம் மனுதாரரின் தாயார் என்றும், விளம்புகை பரிகாரம் கோரி இந்த அசல் வழக்கினை தாக்கல் செய்துள்ளதாகவும், மனுதாரர்கள் பழனியப்பனின் சட்டப்படியான வாரிசுகள் என்றும், 3வது எதிர்மனுதாரர் ஒரு லில்லி பிலோமினா என்பவருக்கும், பழனியப்பன் என்பவருக்கும் பிறந்த சட்டப்படி அல்லாத மகன் என்றும் பழனியப்பன் கடந்த 03.03.2022 தேதியில் மனுதாரர்களையும் 3வது எதிர்மனுதாரரையும் வாரிசாக விட்டு விட்டு இறந்ததாகவும், பழனியப்பன் கோவை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் விரிவுரையாளராக பணிபுரிந்து வந்ததாகவும், 1ம் மனுதாரரை 20 வருடங்களுக்கு முன்பாகவே விட்டு பிரிந்து சென்று பழனியப்பன் லில்லி பிளோமினா என்பவருடன்

வாழ்ந்து வந்ததாகவும், மேற்படி லில்லி பிளோமினா மற்றும் 3 வது எதிர்மனுதாரர் பெயரில் பழனியப்பனின் சொந்த வருமானத்தை கொண்டு பல சொத்துக்கள் வாங்கியுள்ளதாக கூறப்பட்டுள்ளது.

2.2.) பழனியப்பன் விட்டு சென்ற சொத்துக்களை நிறுவகிக்க அவரது வாரிசு சான்றிதழ் தேவைப்படுவதாகவும், 2 வது மனுதாரர் அமெரிக்காவில் வேலை பார்த்து வருவதால் அவரது அதிகார பெற்ற முகவராக 1ம் மனுதாரர் செயல்படுவதாகவும், அவர் 2ம் பிரதிவாதியை அனுகி பழனியப்பனின் சொத்தின் மீதான வருவாய் ஆவணங்களை பெயர் மாற்றம் செய்ய கோரியதாகவும், அதற்காக வாரிசு சான்றிதழ் கேட்டு இணைய வழியில் விண்ணப்பித்துள்ளதாகவும், 2ம் பிரதிவாதி அம்மனுவினை நிராகரித்து விட்டதாகவும், அந்த நிராகரிப்பு உத்தரவில் பழனியப்பனுக்கு இரண்டு மனைவிகள் இருப்பதாக குறிப்பிட்டுள்ளதாகவும், போதிய விசாரணை செய்யாமலேயே இயற்கை நீதியை கடைப்பிடிக்காமல் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது என்றும், தற்போது எதிர்மனுதாரர்கள் சட்டத்திற்கு புறம்பான அரசியல் செல்வாக்கை பயன்படுத்தி வருவாய் ஆவணங்களில் பெயர் மாற்றம் செய்ய முயற்சி செய்து வருவதாகவும், இந்த அசல் வழக்கு முடியும் வரை எதிர்மனுதாரர்கள் பழனியப்பனின் வருவாய் ஆவணங்களில் எந்த வித மாற்றம் செய்யகூடாது என்று இடைகால உத்தரவு பிறப்பிக்க வேண்டி இம்மனு தாக்கல் செய்துள்ளதாக அமைந்துள்ளது.

3) <u>1, 2 எதிர்மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>:–

2ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையை 1ம் மனுதாரர் ஏற்றுக்கொண்டுள்ளார். அதன்படி இந்த எதிருரையில் ஒப்புக்கொண்டுள்ள சங்கதிகளை தவிர மற்ற சங்கதிகளை மனுதாரர்கள் தான் நிரூப்பிக்கவேண்டும் என்றும் காலம் சென்ற பழனியப்பனின் குடும்ப அட்டை மற்றும் ஆதார் அட்டையை தாக்கல் செய்யவில்லை என்றும், பழனியப்பன் 2வது திருமணம் செய்ததற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றும், 3வது எதிர்மனுதாரரின் அடையாள ஆவணங்களையும் பிறப்பு சான்றிதழ் மற்றும் பள்ளி கல்லூரி சான்றிதழ்களையும் தாக்கல் செய்யவில்லை என்றும், பழனியப்பனின் பெயரில் உள்ள உரிமை ஆவணங்களை தாக்கல் செய்யவில்லை என்றும், பழனியப்பனின் பெயரில் சொத்துக்கள் இருப்பதற்கு ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றும், 3வது எதிர்மனுதாரர் பழனியப்பனின் வாரிசு என்பதை மனுதாரர்கள் நிரூப்பிக்கவேண்டும் என்றும் மற்றும் வழக்குரையின் 4வது பத்தியை ஒப்புக்கொள்வோதோடு மற்ற சங்கதிகளை மனுதாரர் நிரூப்பிக்கவேண்டும் என்றும், 1, 2 எதிர்மனுதாரர்கள் அரசு அலுவலர்கள் என்பதால் இந்த வழக்கு தாக்கல் செய்தவற்கு முன்பாக முறையாக பிரிவு 80–ன்படியான அறிவிப்பு கொடுக்கவில்லை என்றும், வழக்கிற்கு வழக்கு மூலம் இல்லை என்றும், இந்த மனுவினை 1, 2 எதிர்மனுதாரர்களுக்கு எதிராக தள்ளுபடி செய்யவேண்டும் என்று

வேண்டப்பட்டுள்ளது.

**4) <u>3 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்</u>:–**

3 ம் எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள அசல் வழக்கின் எதிர் வழக்குரையை எதிருரையாக ஏற்றுக்கொண்டுள்ளார். 3 வது எதிர்மனுதாரர், லில்லி பிளோமினா மற்றும் பழனியப்பனின் சட்டத்திற்கு முரணான மகன் என்பதை மறுப்பதாகவும், 3 ம் எதிர்மனுதாரர் இந்து சமயத்தை சார்ந்தவர் என்றும்,பழனியப்பன் கடந்த 03.03.2022–ல் இறந்துவிட்டதையும், அவர் கோவை மருத்துவ கல்லூரி மருத்துவமனையில் விரிவுரையாளராக பணிபுரிந்து வந்ததையும், 20 வருடங்களுக்கு முன்பாக 1ம் மனுதாரரை விட்டு விட்டு சென்று இரண்டாவதாக லில்லி பிளோமினாவை திருமணம் செய்து கொண்டதாக கூறுவதையும் அவர் பெயரிலும், 3 வது எதிர்மனுதாரர் பெயரிலும் பழனியப்பன் சொத்துக்கள் வாங்கியுள்ளதாக கூறுவதையும் மனுதாரர்களே நிரூப்பிக்கவேண்டும் என்றும், பழனியப்பன் சட்டப்படி லில்லி பிளோமினாவை திருமணம் செய்துள்ளதாகவும், பழனியப்பன் லில்லி பிளோமினாவை தன்னுடைய முதல் திருமணம் ரத்து செய்த பிறகு திருமணம் செய்து கொண்டிருப்பதாக கூறியதாகவும், மேற்படி நபர்களுக்கு பிறந்தவர் தான் 3 ம் எதிர்மனுதாரர் என்றும், பழனியப்பனின் மகன் 3 வது எதிர்மனுதாரர் என்ற முறையில் பழனியப்பனின் சொத்தில் 3 வது மனுதாரருக்கு எல்லா உரிமையும் நலனும் வாரிசுரிமைப்படி உள்ளது என்றும், 1ம் மனுதாரர்

கோவை குடும்ப நீதிமன்றத்தில் ஜீவனாம்சம் கேட்டு பழனியப்பன் மீது அசல் வழக்கு எண்.16/2000 தொடந்ததாகவும், வழக்கு நிலுவையில் இருந்த போதே சமசரம் ஏற்பட்டு 1ம் மனுதாரர் ரூ.5 லட்சத்தை பெற்றுக்கொண்டு சொத்தில் இனிமேல் எந்த உரிமையும் எதிர்காலத்தில் கோரமாட்டேன் என்று கூறியதால் அந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டுள்ளது என்றும், 1ம் மனுதாரருக்கு பழனியப்பனின் அசையும் மற்றும் அசையா சொத்துகளின் மீது எந்த உரிமையோ நலனோ இல்லை என்றும், 3 வது எதிர்மனுதாரரையும் பழனியப்பனின் ஒரு வாரிசு என்றும் விளம்புகை செய்யவேண்டும் என்றும் எதிருரை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

4) இரு தரப்பு வாதம் கேட்கப்பட்டுள்ளது. இருதரப்பிலும் சாட்சிகள் மற்றும் சான்றாவணங்கள் எதுவும் முன்னிலைப்படுத்தவில்லை. வழக்கு கோப்புகளை கவனமாக பரிசீலனை செய்து கருத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளது.

**5) <u>இம்மனு அனுமதிக்கப்பட வேண்டுமா இல்லையா? என்பதே தீர்மாணிக்கப்பட வேண்டிய விஷியமாகும்:–</u>**

5.1.) இம்மனுவின் தரப்பினர்களை அசல் வழக்கின் வரிசைக்கு இணங்க மனுதாரர்களை வாதிகள் என்றும், எதிர்மனுதாரர்களை பிரதிவாதிகள் என்றும் குறித்து உரைக்கப்பட்டுள்ளது. இந்த அசல் வழக்கானது வாதிகள் பிரதிவாதிகளுக்கு எதிராக விளம்புகை பரிகாரம் கோரி வழக்கு தொடர்ந்துள்ளார்கள்.

5.2.) இம்மனுவினை முடிவு செய்வதற்கு முன்பாக கட்டளை 39 விதி 1–ஐ

இவ்விடத்தில் குறித்துரைக்கப்படவேண்டியது அவசியமாகிறது.

கட்டளை 39 விதி 1, 2

1. Cases in which temporary injunction may be granted

Where in any suit it is proved by affidavit or otherwise-

(a) that any property in dispute in a suit is in danger of being wasted, damaged or alienated by any party to the suit, or wrongfully sold in execution of a decree, or

(b) that the defendant threatens, or intends, to remove or dispose of his property with a view to defrauding his creditors,

(c) that the defendant threatens to dispossess, the plaintiff or otherwise cause injury to the plaintiff in relation to any property in dispute in the suit,

the Court may be Order grant a temporary injunction to restrain such act, or make such other Order for the purpose of staying and preventing the wasting, damaging, alienation, sale, removal or disposition of the property or dispossession of the plaintiff, or otherwise causing injury to the plaintiff in relation to any property in dispute in the suit] as the Court thinks fit, until the disposal of the suit or until further Orders.

2. Injunction to restrain repetition or continuance of breach;

(1) In any suit for restraining the defendant from committing a breach of contract or other injury of any kind, whether compensation is claimed in the suit or not, the plaintiff may, at any time after the commencement of the suit, and either before or after judgment, apply to the Court for a temporary injunction to restrain the defendant from committing the breach of contract or injury complained, of, or any breach of contract or injury of a like kind arising out

of the same contract or relating to the same property or right.

(2) The Court may be Order grant such injunction, on such terms as to the duration of the injunction, keeping an account, giving security, or otherwise, as the Court thinks fit.

5.3.) மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Dalpat Kumar v. Prahlad Singh (1992) 1 SCC 719 , a Bench of two Judges of Hon'ble Apex Court held that the phrases "prima facie case", "balance of convenience" and "irreparable loss" are not rhetoric phrases for incantation but words of width and elasticity, intended to meet myriad situations presented by men's ingenuity in given facts and circumstances and should always be hedged with sound exercise of judicial discretion to meet the ends of justice. The court would be circumspect before granting the injunction and look to the conduct of the party, the probable injury to either party and whether the plaintiff could be adequately compensated if injunction is refused. The existence of prima fade right and infraction of the enjoyment of him property or the right is a condition for the grant of temporary injunction. Prima facie case is not to be confused with prima facie title which has to be established on evidence at the trial. Only prima facie case is a substantial question raised, bona fide, which needs investigation and a decision on merits. Satisfaction that there is a prima facie case by itself is not sufficient to grant injunction. The court further has to satisfy that non-interference by the court would result in "irreparable injury" to the party seeking relief and that there is no other remedy available to the party except one to grant injunction and he needs protection from the consequences of apprehended injury or dispossession. Irreparable injury, however, does not mean that there must be no physical possibility of repairing the injury but means only that the Injury must be a material one, namely one that cannot be adequately compensated by way of damages. The balance of convenience

must be in favour of granting injunction. The court while granting or refusing to grant injunction should exercise sound judicial discretion to find the amount of substantial mischief or injury which is likely to be caused to the parties if the injunction is refused and compare it with that which is likely to be caused to the other side if the injunction is granted. If on weighing competing possibilities or probabilities of likelihood of injury and if the court considers that pending the suit, the subject matter should be maintained in status quo, an injunction would be issued. The court has to exercise its sound judicial discretion in granting or refusing the relief of ad interim injunction pending the suit." **– என்று வழங்கியுள்ள கருத்து செறிவுமிக்க முன்தீர்ப்பினை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது.**

**5.4.) மேற்கண்ட சட்டவகைமுறையையும் மாண்புமிகு உச்ச நீதிமன்ற முன்தீர்ப்புகளின் அடிப்படையிலும் 1. முதல் தோற்ற வழக்கு 2. வாய்ப்புகளின் சமநிலைமை 3. ஈடு செய்யமுடியாத இழப்பு ஆகியவை மனுதாரர்களுக்கு ஆதராக இருந்தால் இடைகால உறுத்துக்கட்டளை பரிகாரம் வழங்கலாம் என்பதை இந்நீதிமன்றம் கருத்தில் எடுத்துக்கொண்டுள்ளது. இம்மனுவில் கோரப்பட்டுள்ள பரிகாரமானது அசல் வழக்கு முடியும் வரை காலம் சென்ற பழனியப்பனின் சொத்துக்கள் மீதான வருவாய் ஆவணங்களில் எந்த வித மாற்றமும் செய்யக்கூடாது என்று இடைக்கால உறுத்துக்கட்டளை பரிகாரம் கோரப்பட்டுள்ளது. ஆனால் காலசென்ற பழனியப்பனின் சொத்துக்கள் குறித்தும் அந்த சொத்துக்கள் எந்த மாவட்டத்தில் எந்த வட்டத்தில் எந்த கிராமத்தில் எந்த காலை எண்ணில்**

உள்ளது என்பதை பற்றியும் மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. காலம் சென்ற பழனியப்பனின் பெயரில் சொத்துக்கள் இருப்பதை காண்பிக்க உரிமை ஆவணங்களையோ வருவாய் ஆவணங்களையோ, நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை. இம்மனுவில் சொத்து விவரம் எதுவும் பின் இணைப்பாக இணைக்கப்படவில்லை. மேற்கண்ட சூழ்நிலையில் உறுத்துக்கட்டளை பரிகாரமானது எந்த சொத்தினை பொறுத்து பரிகாரம் கோரப்படுகிறது என்பதை மனுதாரர்கள் குறிப்படாததால் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவில் முதல் தோன்ற ஆதாரம் இல்லை என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது. மேற்கண்ட சூழ்நிலையில் மனுதாரர்கள் தாக்கல் செய்துள்ள இம்மனுவினை நீதியின் நலன் கருதி அனுமதிக்க உகந்தது அல்ல என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**முடிவாக,** மனு செலவு தொகையின்றி தள்ளுபடி செய்து உத்திரவிடப்படுகிறது.

இந்த உத்தரவானது என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் நேரடியாக கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, பிறகு என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு திறந்த நீதிமன்றத்தில் 13.07.2023 அன்று அவையறிய பகரப்பட்டது.

S VADIVEL
Digitally signed by S VADIVEL
Date: 2023.07.13 20:12:57 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம் (பொறுப்பு)**

**<u>பிற்சேர்க்கை :</u>** இல்லை.

S VADIVEL Digitally signed by S VADIVEL Date: 2023.07.13 20:13:05 +0530

**மாவட்ட உரிமையியல் நீதிபதி,**
**பல்லடம் (பொறுப்பு)**

இ.நி.ம.எண்.291/2022
இன்
அ.வ.எண்.112/2022
வரைவு /சீரான உத்தரவு
நாள்.13.07.2023
மா.உ.நீ., பல்லடம் (பொறுப்பு)